[2005 ஏப்ரல் 13

(ஈ) நீலகிரி மாவட்டம், கேத்தி ஊராட்சி, ஹாலன் நகர மக்களுக்குப் பாதை வசதி அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 55–ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த அடுத்த கவன ஈர்ப்பு. திரு. எச்.எம். ராஜு அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. எச்.எம். ராஜு.*

***திரு. எச்.எம். ராஜு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம், கேத்தி ஊராட்சிக்குட்பட்ட ஹாலன் நகர மக்களுக்குப் பாதை வசதி செய்து தர வேண்டிய அவசியம்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

அறிக்கை

நீலகிரி மாவட்டம், குன்னூர் வட்டம், கேத்தி கிராமத்தில் சுமார் 218 ஏக்கர் நிலப் பரப்பளவில் "செயின்ட் ஜார்ஜ் ஹோம்" என்கின்ற ஆங்கிலோ–இந்தியக் கல்வி நிறுவனம் 1914 முதல் இயங்கி வருகின்றது. இந்தப் பள்ளியின் அருகே உள்ள ஹாலன் நகர் (Halan Nagar) *என்ற பகுதியில் சுமார் 100 குடும்பங்கள் வசித்து வருகின்றன. மேற்படி ஹாலன் நகருக்கு, இப்பள்ளிக்குச் சொந்தமான நிலத்தின் வழியாகப் பாதை ஒன்று செல்கின்றது. மேற்படி கல்வி நிறுவனத்தின் வாகனங்கள் தவிர, இப்பாதையில் சென்று வரும் பிற வாகனங்களிடம், இக்கல்வி நிறுவனம் சுங்கக் கட்டணம்* (Toll) *வசூலித்து வந்தது. இவ்வாறு முறையான அனுமதி பெறாமல் சுங்கக் கட்டணம் வசூலிப்பது அப்பகுதி மக்களால் எதிர்க்கப்பட்டதால், குன்னூர் கோட்ட வருவாய் அலுவலர், குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவு 133–ன்கீழ், மேற்படி சுங்கம் வசூலிக்கத் தடை செய்து உத்தரவிட்டார். இதனைச் தொடர்ந்து, பள்ளி நிருவாகம், அப்பாதையை வாகனங்கள் செல்லாதவாறு மூடியதுடன், இது தொடர்பாகக் காவல் நிலையத்தில் புகார் செய்ததுடன், உதகை சார்நிலை நீதிமன்றத்தில் வழக்கும் தொடர்ந்தது. இதுகுறித்து கேத்தி காவல் நிலையத்தில் விசாரணை நடைபெற்று*

2005 ஏப்ரல் 13] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

வருகின்றது. அதேபோல, மேற்படி நிலத்தின் உரிமை குறித்து சார்நிலை நீதிமன்ற வழக்கும் நிலுவையில் உள்ளது.

பிரஸ்தாப வழிப் பாதையை நீலகிரி மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலருடன் சேர்ந்து புலத் தணிக்கை செய்துள்ளார். மேற்படி சாலை புல எண்கள் 729, 727, 726, 725, 723, 720 மற்றும் 997 வழியாக, புல எண் 972–ல் உள்ள ஹாலன் நகருக்குச் செல்கிறது. இப்புல எண்களில் புல எண் 972 மட்டும் கிராம நத்தம் என கிராமக் கணக்குகளில் தாக்கலாகியுள்ளது. பிற புல எண்கள் அனைத்தும் பள்ளிக்குச் சொந்தமான பட்டா நிலங்கள் ஆகும். ஹாலன் நகரைச் சார்ந்த மக்கள் தங்கள் கிராமத்திற்குச் சென்று வர, தற்போது பள்ளிக்குச் சொந்தமான 1½ கிலோ மீட்டர் நீளமுள்ள ஜல்லி ரோடு மற்றும் 282 மீட்டர் நீளமுள்ள மண்பாதையையும் பயன்படுத்தி வருகின்றனர். மேற்படி ஹாலன் நகர் மக்களுக்கு, அவர்களுடைய கிராமத்திற்குச் செல்வதற்கு வேறு பாதை ஏதுமில்லை.

சூழ்நிலையின் தன்மையைக் கருத்தில்கொண்டு, இப்பகுதியில் காவல் துறையின் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண பள்ளி நிர்வாகத்துடன் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. பிரஸ்தாப பாதையைப் பொது மக்கள் பயன்படுத்த பள்ளி நிருவாகம் இசைவு தெரிவிக்காதபட்சத்தில், மேற்படி கேத்தி கிராமம் புல எண்கள் 729, 727, 726, 725, 723 மற்றும் 720 ஆகியவற்றில் சுமார் 0.49 ஏக்கர் மற்றும் புல எண் 997–ல் சுமார் 0.37 ஏக்கர் ஆக 0.86 ஏக்கர் நிலத்தை, சம்பந்தப்பட்ட கிராமப் பஞ்சாயத்திடம் கோரிக்கையினைப் பெற்று, நில எடுப்புச் சட்டம், 1894–ன்கீழ் கையகப்படுத்தி பாதை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் தொவித்துள்ளார்.

எனினும், இப்பிரச்சினைக்கு சமூகத் தீர்வு காணும்பொருட்டு, பள்ளி நிருவாகத்திடம் மாவட்ட நிருவாகம் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எச்.எம். ராஜு.

திரு. எச்.எம். ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம், குன்னூர் தாலுகாவிலுள்ள கேத்தி சிறப்பு நிலை ஊராட்சிக்குட்பட்ட ஹாலன் நகர், 1970 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு, அங்கே நமது அரசினால் கொடுக்கப்பட்ட மனைப் பட்டாக்களில் 125 ஆதிதிராவிட மக்கள் வீடு கட்டி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எள்ள நல்லி, கேத்தி, உள்ளாட, முக்கட்டி உட்பட்ட சுமார் 350–க்கும் மேற்பட்ட

[திரு. எச்.எம். ராஜு] [2005 ஏப்ரல் 13

விவசாயக் குடிமக்கள், அந்தப் பாதையை சுமார் 300 ஆண்டுகளாக உபயோகித்து வந்தார்கள். சுங்க வரி வசூல் செய்த அந்தப் பள்ளி நிர்வாகத்தைப் பொதுமக்கள் போராட்டம் நடத்தியதினால், மாவட்ட நிர்வாகம் அதற்கு அந்தச் சுங்க வரியை நிறுத்திவிட்டது. சில மாதங்களுக்குப் பிறகு மீண்டும் அந்தப் பள்ளி 5,000 ரூபாய் வைப்பு நிதி வைக்க வேண்டும், deposit தர வேண்டுமென்று, கடந்த 10 நாட்களாக விவசாயிகளைத் துன்புறுத்திக் கொண்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நான் கொடுத்த பணத்தால் நடைபெற்றுக்கொண்டிருந்த அந்தக் கட்டுமானப் பணிகள் எல்லாம் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. பள்ளிக் குழந்தைகள், முதியோர்கள், கர்ப்பிணிப் பெண்கள் எல்லாம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். புல எண் 972 நமது அரசுக்குச் சொந்தமானது. 282 மீட்டர் நீளமுள்ள மண் பாதை, புல எண் 972–ல் இருக்கிறது. அந்தப் புல எண்ணுக்கும் அந்தப் பள்ளி நிர்வாகத்திற்கும் எந்தவிதச் சம்பந்தமும் இல்லை. வேறு பாதையும் அந்த நகர்ப் பகுதி மக்களுக்குச் செல்வதற்கு இல்லை. ஆகவே, நமது அரசு போர்க்கால அடிப்படையில் பொது மக்கள் நடப்பதற்கும், விவசாயிகள் தங்கள் பொருட்களை எடுத்துச் செல்வதற்கும், பொருட்களை எடுத்து வருவதற்கும், உதவும் வகையில் இச்சாலையை ஏற்படுத்தித் தருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 12–05

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண பள்ளி நிர்வாகத்துடன் பேச்சு வார்த்தை நடைபெற்று வருகிறது. பிரஸ்தாப பாதையைப் பொது மக்கள் பயன்படுத்த பள்ளி நிர்வாகம் இசைவு தெரிவிக்காதபட்சத்தில் மேற்படி கேத்தி கிராமம், புல எண்கள் 729, 727, 726, 725, 723 மற்றும் 720 ஆகியவற்றில் சுமார் 0.49 ஏக்கர் மற்றும் புல எண் 997–ல் சுமார் 0.37 ஏக்கராக 0.86 ஏக்கர் நிலத்தைச் சம்பந்தப்பட்ட கிராம பஞ்சாயத்திடம் கோரிக்கையைப் பெற்று நில எடுப்புச் சட்டம், 1894–ன்கீழ் கையகப்படுத்தி, பாதை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எச்.எம். ராஜு.

திரு. எச்.எம். ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளுக்கு மரியாதைத் தராத

பள்ளி நிர்வாகத்தின்மேல் மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டார்கள். இப்போது மீண்டும் 5,000 ரூபாய் வைப்பு நிதி என்று அவர்கள் கேட்பதினால், புல எண்கள் 770, 723, 725, 726, 727, 729 ஆகிய புல எண்களில் சுமார் 75 சென்ட் பூமியையும் மீதமுள்ள 997 புல எண்ணில் சுமார் 75 சென்ட் பூமியையும் நில எடுப்புச் சட்டம், 1894–ன்கீழ் நமது அரசு உடனடியாகக் கையகப்படுத்தி, கேள்விக்குரிய இந்த முக்கியமான சாலையை அமைத்துக்கொடுத்து அரசு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து ஹாலன் நகர் மக்களுக்கு உதவ முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவே பேச்சுவார்த்தை நடக்கிறது என்று சொல்லியிருக்கிறார்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே பதிலைச் சொல்லியிருக்கின்றேன். அவர்கள் பேச்சுவார்த்தைக்கு உடன்பட்டு வரவில்லை என்றால், நில எடுப்புச் சட்டம் 1894–ன்கீழ் நிலத்தை கையகப்படுத்தி, பாதையை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(உ) கன்னியாகுமரி, கலிங்கராஜபுரம், கயிறு மற்றும் கயிறு பாய் சிறுதொழில் நிறுவனத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 55–ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த அடுத்த கவன ஈர்ப்பு. திரு. டி. மணி அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. டி. மணி.

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், கலிங்கராஜபுரம் பகுதியில் 'கயிறு மற்றும் கயிறு பாய்' சிறு தொழில் நிறுவனம் மூடப்பட்டதால் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.